# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1774/27 - 2012 සැප්තැම්බර් මස 06 වැනි බ්‍රහස්පතින්දා - 2012.09.06

*1774/27 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 06 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 9/93.*

**(469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்**

*(469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 71 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய 30 ஆம் பிரிவின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

எஸ். எம். சந்திரசேன,
கமநல சேவைகள் மற்றும் வனசீவராசிகள்
அமைச்சர்.

கமநல சேவைகள் மற்றும் வனசீவராசிகள் அமைச்சு,
கொழும்பு,
2012, ஓகத்து 29.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2012 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க கடல் முலையூட்டிகள் (அவதானிப்பு, ஒழுங்குபடுத்தல் மற்றும் கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இவ்வொழுங்குவிதிகள், எந்தக் கடல் முலையூட்டிகளின் இயற்கையான வாழ்விடம் இலங்கை ஆள்புல நீர்ப்பரப்பினுள் இருக்கின்றதோ அந்த எல்லா கடல் முலையூட்டிகளின் அமைதி மிக்கதும் இயற்கையானதுமான உயிர்வாழ்வை சாத்தியமான அதிகபட்ச அளவுக்கு உறுதிப்படுத்துவதற்கும் அத்தகைய கடல் முலையூட்டிகளை அவதானிக்கின்ற நோக்கத்திற்கென பாவனையாளர்களால் பயன்படுத்தப்படும் கலங்களை ஒழுங்குபடுத்துவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் உதவுவதற்குமென முன்னப்படுகின்றது.

3. (1) கடல் முலையூட்டிகளின் இயற்கை வாழ்விடங்களாக உள்ள இடங்களுக்கு பார்வையாளர்களைக் கூட்டிச் செல்லும் நோக்கத்திற்கு ஓட்டிச் செலுத்தப்படும் கலம் ஒவ்வொன்றும், (இது இதனகத்துப்பின்னர் பணிப்பாளர் தலைமையதிபதி எனக் குறிப்பீடு செய்யப்படும்) வன சீவராசிகள் பாதுகாப்பு பணிப்பாளர் தலைமையதிபதியிடமிருந்து அல்லது அதன் சார்பில் அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரிடமிருந்து அத்தகைய நோக்கத்திற்கு பிரத்தியேகமாக உரிமம் ஒன்றைப் பெற்றுக்கொள்வதன் மேல் மட்டுமே அவ்வாறு பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) கடல் முலையூட்டிகளை அவதானிப்பதற்கு பார்வையாளர்களைக் கூட்டிச் செல்வதற்கென கலம் ஒன்றை ஓட்டிச் செலுத்துவதற்கு உரிமையாளரை அல்லது தொழிற்படுத்துநரை அதிகாரமளிக்கின்ற (1) ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்டவாறாக உரிமம் ஒன்றைப் பெறுவதற்கு விரும்புகின்ற கலமொன்றின் உரிமையாளர் ஒருவராக அல்லது தொழிற்படுத்துநர் ஒருவராக இருக்கின்ற ஆள் ஒவ்வொருவரும் குறித்துரைக்கப்பட்ட கட்டணம் ஒன்றுடன் சேர்த்து இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை I இல் தரப்பட்டுள்ளவாறாக பொருளளவிலான படிவத்தில் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(3) கடல் முலையூட்டிகளை அவதானிப்பதற்கு பார்வையாளரைக் கூட்டிச் செல்லுகின்ற நோக்கத்திற்கென ஓட்டிச் செலுத்தப்படும் கலம் ஒவ்வொன்றும் (1) ஆம் பந்தியினால் குறித்துரைக்கப்பட்டவாறாக உரிமமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னதாக (இதனகத்துப்பின்னர் திணைக்களம் எனக் குறிப்பீடு செய்யப்படும்) வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தில் பதிவு செய்யப்படுதல் வேண்டும். செலுத்தப்படற்பாலதான பதிவுக் கட்டணம் ஆண்டு தோறும் ஐயாயிரம் ரூபாவாக இருத்தல் வேண்டும்.

(4) விண்ணப்பதாரியானவர், (2) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி செய்யப்படவுள்ள விண்ணப்பமொன்றுடன் சேர்த்துப் பின்வருவனவற்றையும் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(அ) அத்தகைய நோக்கத்திற்கு பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிடமிருந்து பெறப்பட்ட அத்தகைய கலம் தொடர்பிலான தகுதிச்சான்றிதழ் ஒன்று ;

(ஆ) அத்தகைய கலம் கொண்டு செல்வதற்கு உரித்துடைய அதனது சிற்பந்தி உறுப்பினர்கள் மற்றும் பயணிகளின் எண்ணிக்கையைக் காப்பீடு செய்கின்ற அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதிக் கம்பெனியிடமிருந்து பெறப்பட்ட கலத்துக்கான முழுமையான காப்புறுதிக் காப்பீடு ஒன்று ;

(இ) சிற்பந்திகள் மற்றும் பயணிகள் இருவருக்குமான உயிர்க்காப்பு மேலங்கிகள் மற்றும் வேறு அத்தியாவசியமான உயிரைக் காக்கின்ற கருவிகள் அக்கலத்தில் பொருத்தப்பட்டிருப்பதற்கான நிரூபணம்.

4. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்படுதல் வேண்டுமென்பதுடன் அவர் தரப்பட்ட தகவல்கள் மற்றும் வேறு விபரங்களின் சரிபார்த்தலின் மேல் ஒன்றில் இவ்வொழுங்குவிதிகளின் நியதிகளின்படி உரிமம் ஒன்றை அத்தகைய கலம் ஒன்று தொடர்பில் வழங்குதல் வேண்டும் அல்லது தரப்பட்ட தகவல் அல்லது வேறு விபரங்கள் சரியற்றதாக இருக்குமெனில், அத்தகைய உரிமம் ஒன்றை வழங்குவதற்கு மறுத்தல் வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதி இந்நோக்கத்திற்கென திணைக்களத்தினால் பேணப்படவேண்டிய பதிவேடு ஒன்றில் அத்தகைய கலத்தைப் பதிவு செய்யப்படச் செய்வித்தலும் வேண்டும்.

5. ஏதேனும் பதிவு செய்யப்பட்ட கலத்திற்கு வழங்கப்பட்ட உரிமம் இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்படும் படிவத்தில் பொருளளவில் இருத்தல் வேண்டுமென்பதுடன், கடல் முலையூட்டிகளை அவதானிக்கின்ற நோக்கத்திற்கென தகுந்த வேறேதேனும் நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படுதலாகாது. அத்தகைய உரிமம் எல்லா நேரங்களிலும் கலம் ஒன்றில் கொண்டு செல்லப்படுதல் வேண்டுமென்பதுடன் நீரினால் அல்லது வேறேதேனும் அதையொத்த முறையினால் ஏற்படும் சேதத்தில் இருந்து சாத்தியமான அளவுக்கு பாதுகாக்கப்படுதலும் வேண்டும்.

6. எந்தக் கலம் தொடர்பில் உரிமம் ஒன்று வழங்கப்பட்டுள்ளதோ அந்தக் கலம் ஒன்றில் அத்தகைய ஆளுக்கு வழங்கப்பட்ட உரிமத்தில் பொதுவாக தலைமையதிபதியினால் அல்லது காலத்திற்குக்காலம் வழங்கப்படும் அதன் சார்பினாலான அறிவித்தலினால் குறித்துரைக்கப்படும் வலயம் அல்லது வலயங்களினுள் மட்டும் அத்தகைய கலத்தை ஓட்டிச் செலுத்துவதற்கு அதிகாரமளிக்கப்படுதல் வேண்டும்.

7. ஏதேனும் கலம் ஒன்றிற்கு வழங்கப்பட்ட உரிமம் ஒன்றின் வலிதாந்தன்மைக் காலம் ஒரு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும். ஏதேனும் ஆண்டிற்கான உரிமம் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் நேர்முந்திய ஆண்டின் திசெம்பர் 15 ஆந் திகதிக்கு முன்னர் செய்யப்படுதல் வேண்டும்.

8. குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் கடல் முலையூட்டிகளின் அவதானிப்புக்கெனப் பயன்படுத்தப்படும் கலம் ஒன்றிற்கான ஆண்டு உரிமத்திற்கு விண்ணப்பிக்கத் தவறுகின்ற எவரேனும் ஆள் அக்கலம் தொடர்பில் உரிமம் இன்றி ஓட்டிச் செலுத்துகின்ற ஒவ்வொரு நாளுக்கும் நாளுக்கு நூறு ரூபாவான தண்டமொன்றுக்கு ஆளாதல் வேண்டும்.

9. கடல் முலையூட்டியை அவதானிக்கும் நோக்கத்திற்கென ஓட்டிச் செலுத்தப்படுகின்ற கலம் ஒன்றின் எவரேனும் பயணி அதிகாரமளிக்கப்பட்ட வலயம் அல்லது வலயங்களுக்குள் சுழி ஓடுதல் மூலம் கடல் முலையூட்டிகளை அவதானிப்பதற்கு விருப்புகின்றவிடத்து, அக்கலத்தின் தொழிற்படுத்துநர் அதற்கென பணிப்பாளர் தலைமையதிபதியிடமிருந்து முன்னரான அங்கீகாரம் ஒன்றைப் பெறுதல் வேண்டும்.

10. கடல் முலையூட்டிகளின் வாழ்விடத்தில் அவற்றை அவதானிப்பதற்கு கடலுக்கு பயணிகளைக் கூட்டிச் செல்வதற்கு முன்னதாக, பயணிகள் கடல் முலையூட்டிகளின் காப்புக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான தேவை மற்றும் எந்த மட்டுப்பாடுகளுக்கு அமைவாக அவர்கள் கடல் முலையூட்டிகளை அவதானிப்பதற்கு கடலுக்கு கூட்டிச் செல்லப்படுகின்றார்களோ அந்த மட்டுப்பாடுகளுக்கான தேவை பகுப்பாய்வு செய்யப்படுதல் வேண்டும்.

11. திணைக்களமானது கலமொன்று கடல் முலையூட்டிகளை அவதானிப்பதற்கென பயணிகளைக் கூட்டிச்செல்வதில் ஈடுபடும்போது ஏற்புடையதாக இருக்கும் மட்டுப்பாடுகளை உள்ளடக்குகின்ற அச்சடிக்கப்பட்ட சாதனம் உரிமமளிக்கப்பட்ட தொழிற்படுத்துநர்களுக்கு தயாரித்துக் கிடைக்கக்கூடியதாகச் செய்தல் வேண்டும்.

12. கடல் முலையூட்டிகளை அவதானிப்பதற்கான பயணிகளைக் கூட்டிச் செல்லுகின்ற கலம் ஒவ்வொன்றும் அதில் தொழிற்படுத்துநர் ஒருவர், உதவித் தொழிற்படுத்துநர் ஒருவர் மற்றும் வழிகாட்டி ஒருவரைக் கொண்டிருத்தல் வேண்டும். வழிகாட்டி திணைக்களத்தினால் பயிற்சியளிக்கப்பட்ட வழிகாட்டி ஒருவராக இருத்தல் வேண்டும். எல்லா வழிகாட்டிகளும் திணைக்களத்தில் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

13. கடல் முலையூட்டிகளை அவதானிப்பதற்கு கலம் ஒன்றில் கடலுக்குச் செல்வதற்கு விரும்புகின்ற ஆள் அல்லது ஆட்கள் குழுமம் ஒவ்வொன்றும் அது சார்பில் பணிப்பாளர் தலைமையதிபதியிடமிருந்து அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அது சார்பில் அதிகாரமளிக்கப்பட்டவரும் அந்நோக்கத்திற்கென வெளியேறும் நிலையில் பிரசன்னமாக இருக்கவேண்டிய அலுவலருமான ஒருவரிடம் இருந்து அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கு நாடுகின்ற ஆள் அந்நிலையில் அவருக்குக் கிடைக்கக்கூடியதாகச் செய்யப்படவேண்டிய படிவம் ஒன்றை நிரப்புவதன்மூலம் அட்டவணை IV இல் தரப்பட்டிருக்கின்ற கருமங்கள் தொடர்பில் தகவலை கொடுத்துதவுவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும். அவ்வாறு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் அட்டவணை V இல் தரப்பட்டுள்ள படிவத்தில் இருத்தல் வேண்டும். அனுமதிப்பத்திரமான அட்டவணை V இல் குறித்துரைக்கப்பட்ட கட்டணத்தின் செலுத்துகைமீது வழங்கப்படுதல் வேண்டும்.

14. கடல் முலையூட்டிகளை அவதானிக்கின்ற நோக்கத்திற்கென இவ்வொழுங்குவிதிகளின் நியதிகளின்படி வழங்கப்பட்ட உரிமம் ஒன்று இழக்கப்படுமிடத்து அல்லது சேதமடையுமிடத்து, அவ்வுரிமம் தொடர்புபடும் கலத்தின் உரிமையாளர் அல்லது தொழிற்படுத்துநர் புதிய உரிமம் ஒன்றின் வழங்கலுக்கென பணிப்பாளர் தலைமையதிபதிக்கு எழுத்திலான விண்ணப்பம் ஒன்றை அனுப்புதல் வேண்டும். ஐந்நூறு ரூபா கட்டணமொன்று புதிய உரிமம் ஒன்றின் வழங்கலுக்கு என அறவிடப்படுதல் வேண்டும்.

### அட்டவணை I

### தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்

*கடல் முலையூட்டி இனங்களை அவதானிப்பதற்கென கலம் ஒன்றை ஓட்டிச் செலுத்துவதற்கான உரிமத்திற்கான விண்ணப்பம்*

(1) விண்ணப்பதாரரின் விபரங்கள் :-

(i) விண்ணப்பதாரரின் முழுப்பெயர் :----.
(ii) விண்ணப்பதாரரின் முகவரி :----.
(iii) தேசிய அடையாள அட்டை இல. :----.
(iv) தொலைபேசி இல. :----.
(v) மின் அஞ்சல் முகவரி :----.
(vi) படகுத் தரிப்பிடத்தின் பெயர் :----.
(vii) படகுத் தரிப்பிடம் அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவு :----.

(2) விண்ணப்பதாரரின் கலத்தின் உரிமையாளர் அல்லர் எனின் உரிமையாளரின் விபரம் :-

(i) உரிமையாளரின் முழுப்பெயர் :----.
(ii) கல உரிமையாளரின் முகவரி :----.
(iii) தேசிய அடையாள அட்டை இல. :----.
(iv) தொலைபேசி இல. :----.
(v) மின் அஞ்சல் முகவரி :----.
(vi) பிரதேச செயலாளர் பிரிவு :----.

(3) கலத்தின் விபரங்கள் :-

(i) கலத்தின் பதிவு செய்யப்பட்ட இலக்கம் :----.
(ii) அது பதிவு செய்யப்பட்டுள்ள அலுவலகம் :----.
(iii) காப்புறுதிப் பூட்கையின் இலக்கம் :----.

(iv) கலத்தின் பெயர். :----.
(v) பயணிகளுக்கான போதுமான உயிர்காப்புக் கருவிகள் கலத்தில் கிடைக்கக்கூடியதாக இருக்கின்றதா? :----.
(vi) ஒரு சுற்றுலாவிற்குக் கலத்தில் கொண்டு செல்லப்படக்கூடிய பயணிகளின் ஆகக்கூடிய எண்ணிக்கை :----.
(vii) தகுதிச் சான்றிழை வழங்கியுள்ள நிறுவனத்தின் பெயர் :----.
(viii) வழங்கிய திகதி :----.
(ix) படகுத் தரிப்பிடம் அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவு :----.

(4) கலத்தைத் தொழிற்படுத்துநரின் விபரங்கள் :-

(i) முழுப்பெயர் :----.
(ii) முகவரி :----.
(iii) தே. அ.அ. இல. :----.

(5) உதவிக் கலத்தைத் தொழிற்படுத்துநரின் விவரங்கள் :-

(i) முழுப்பெயர் :----.
(ii) முகவரி :----.
(iii) தே. அ.அ. இல. :----.

(6) எந்தக் காலப்பகுதிக்கு உரிமம் ஏற்புடையதாக இருக்கின்றதோ அந்தக் காலப்பகுதி (ஆகக்கூடிய காலப்பகுதி ஒரு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும் ) :---- இல் இருந்து 200........................ வரைக்கும்.

(7) விண்ணப்பதாரியினாலான பிரகடனம் :-

நான் மேற்சொல்லப்பட்ட விபரங்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் அத்துடன் தாவர விலங்கினப் பாதுகாப்புக் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்துடனும் கடல் முலையூட்டிகளை அவதானிக்கின்ற நோக்கத்திற்கெனத் தயாரிக்கப்படுகின்றவாறான அத்தகைய ஒழுங்குவிதிகளுடன் இசைவாக நான் செயற்படுவேன் எனவும் இத்தால் சான்றுறுதிப்படுத்துகின்றேன். நான் கடல் முலையூட்டிகளை அவதானிக்கின்ற கலத்தைச் செயற்படுத்துகின்றபோது எந்த நிபந்தனைகளுக்கு அமைவாக இவ்வுரிமம் வழங்கப்படுகின்றதோ அதற்கு அமைவாக இணங்கியொழுகுவேன்.

......................................
திகதி :.................. விண்ணப்பதாரியின் கையொப்பம்.

### *அட்டவணை II*

### தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்

*கடல் முலையூட்டி இனங்களை அவதானிப்பதற்கென கலம் ஒன்றை ஓட்டிச் செலுத்துவதற்கான உரிமம்*

உரிமத்தின் இலக்கம் :----.
கலத்தின் பெயர் :----.
கலத்தின் இலக்கம் :----.

(இதனகத்துப்பின்னர் உரிமம்கொளி எனக் குறிப்பீடு செய்யப்படும்)................................... என்னும் இடத்தைச் சேர்ந்த திரு./திருமதி...................................... என்பவர், காலை 5.30 மணி தொடக்கம் மாலை 7.00 மணி வரையிலான மணித்தியாலங்களின்போது வலயம்/வலயங்களினுள் கடல் முலையூட்டிகளை அவதானிப்பதற்கு ஆட்களைக் கூட்டிச்செல்லும் நோக்கத்திற்கென ................................. என்னும் இடத்தைச் சேர்ந்த ................................................................. என்பவருக்குச் சொந்தமான .................................... பதிவு இலக்கத்தைக் கொண்ட கலத்தை ஓட்டிச் செலுத்துவதற்கு இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்றது. இக்கலம் ..................................................... என்னும் இடத்தில் ............................................................................ என்பவருடைய படகுத் தரிப்பிடத்தில் கட்டிவைக்கப்படலாம்........................................................ என்னும் இடத்தைச் சேர்ந்த...................................................... என்பவர் தொழிற்படுத்துநராக இருத்தல் வேண்டுமென்பதுடன் ................................................................................ என்னும் இடத்தைச் சேர்ந்த.......................................................................... என்பவர் உதவித் தொழிற்படுத்துநர் ஆதல் வேண்டும்.

(இவ்வுரிமம் கடலில் கலம் ஓட்டிச் செலுத்தப்படும் நேரத்தில் உரிமம்கொளி அல்லது தொழிற்படுத்துநரினால் வைத்திருக்கப்படுதல் வேண்டும். இவ்வுரிமம் கைமாற்றத்தகாதது ஆகும்).

.....................

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்/
பணிப்பாளர் தலைமையதிபதி
வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்.

திகதி:.......................

## *அட்டவணை III*

### உரிமம் ஒன்று பயன்படுத்தப்படக்கூடிய நிபந்தனைகள்

(1) கலம் ஒன்றின் உரிமையாளர் அல்லது தொழிற்படுத்துநருக்கு வழங்கப்படும் உரிமம் கைமாறத்தகாததாதல் வேண்டும்.

(2) கலம் குறித்துரைக்கப்பட்ட படகுத் தரிப்பிடத்திலிருந்து தனது பயணத்தை தொடங்குதல் வேண்டும் என்பதுடன் அதே இடத்திற்குத் திரும்புதலும் வேண்டும்.

(3) கலம் ஒவ்வொன்றும் 50 மீற்றர் தூரத்தில் இருந்து அவதானிக்கப்படக்கூடியவாறு அதன் மீது அதனது கல இலக்கம் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

(4) கடல் முலையூட்டிகளை அவதானிப்பதற்காக நாள்தோறும் காலை 5.30 மணி தொடக்கம் மாலை 7.00 மணி வரை அனுமதி வழங்கப்படும்.

(5) கடல் முலையூட்டிகள் அவதானிக்கப்படுமிடத்து கலத்தினுடைய வேகம் அந்தக் கலம் 400 மீற்றர் தூரத்தில் இருக்கும் வரை படிப்படியாக குறைக்கப்படுதல் வேண்டும். திமிங்கலம் தொடர்பில் கலத்தினுடைய இயந்திரம் திமிங்கலத்திலிருந்து 100 மீற்றர் தூரத்தில் நிறுத்தப்படுதல் வேண்டும். அத்துடன் எந்தச் சந்தர்ப்பத்திலும் திமிங்கலத்திலிருந்து 100 மீற்றர் தூரத்திற்கு நெருக்கமாக கலம் இருத்தலாகாது ; வேறு முலையூட்டிகள் தொடர்பில் அக்கலம் அத்தகைய முலையூட்டிகளில் இருந்து 50 மீற்றர் தூரத்திலும் பார்க்க நெருக்கமாகச் செல்லுதல் ஆகாது.

(6) கலம் சடுதியாக அதனது வேகத்தை அல்லது திசையை மாற்றுதல் ஆகாது. முலையூட்டிகள் அவதானிக்கப்படுமிடத்து கலம் முலையூட்டிகளுக்கு முன் அல்லது பின் ஓட்டிச் செல்லுதலாகாது என்பதுடன் அந்தக் கலம் எந்த நேரத்திலும் அத்தகைய முலையூட்டிகளின் இடம்பெயரும் வழியை தடுக்காதிருப்பதைக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

(7) எந்த செயற்கையான உணவுப் பொருட்கள் ஒளி, ஒலி அலைகள் மற்றும் கடல் முலையூட்டிகளைக் கவருகின்ற வேறு ஏதேனும் முறைகள் கலத்துக்கு நெருக்கமாக அவற்றைக் கவருவதற்கு அல்லது வசப்படுத்துவதற்குப் பயன்படுத்துதலாகாது.

(8) கடல் முலையூட்டிகளை அவதானிப்பதற்கு பயணிகளுடன் ஓட்டிச் செலுத்தப்படும் கலங்கள் அதில் பதிவு செய்யப்பட்ட வழிகாட்டி ஒருவருடன் எப்போதும் ஓட்டிச் செலுத்துதல் வேண்டும்.

(9) கலத்தை தொழிற்படுத்துகின்ற ஆட்கள் அல்லது கலத்தில் உள்ள பயணிகள், கலத்தினுள் மதுபானத்தைக் கொண்டு செல்லுதலோ அல்லது மது போதையான நிலையில் அவர்கள் கலத்தில் இருத்தலோ ஆகாது.

(10) உரிமப்பத்திரயுரித்துடையவர், மேற்சொல்லப்பட்ட நிபந்தனைகளுக்கு மேலதிகமாக பணிப்பாளர் தலைமையதிபதியினால் காலத்துக்குக்காலம் குறித்துரைக்கின்ற வேறு நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டவராவார்.

(11) கலங்களைத் தொழிற்படுத்துநர் அல்லது வழிகாட்டிகள் அல்லது முலையூட்டிகளை அவதானிப்பதற்கு பயணிகளைக் கூட்டிச் செல்லுகின்ற ஆட்கள் இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை அவ்வாறு மீறுவதற்கான அத்தகைய முறை ஒன்றில் செயற்படுத்தலாகாது.

(12) கடல் முலையூட்டிகளை அவதானிப்பதில் ஈடுபட்டிருக்கின்ற ஆட்கள் கடலில் இறங்குவதற்கு அனுமதிக்கப்படுதல் ஆகாது என்பதுடன் பணிப்பாளர் தலைமையதிபதியின் முன்னரான அங்கீகாரம் பெற்றுக்கொண்டதன் பின்னர் சுழியோடுதல் தவிர்ந்த கடல் முலையூட்டிகளுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய எதனையும் செய்தல் ஆகாது.

(13) கடல் முலையூட்டிகளை அவதானிப்பதற்கு கடலுக்குள் இறங்குகின்ற போது மீன்பிடிக் கைத்தொழிலில் ஈடுபடுகின்றவர்கள் தொந்தரவு செய்தலாகாது.

(14) கலத்தில் உள்ளவர்கள் பிரதான இடப்பரப்புடன் அவ்வாறு தொடர்புகொள்ளக்கூடியதாக தொடர்பாடல் கருவிகளைக் கலத்தில் கொண்டு செல்லுதல் வேண்டும் என்பதுடன் அது ஜி. பி . எஸ் கருவியைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(15) கலத்தில் தொழில்நுட்பக் கோளாறு இருப்பின் அல்லது கலம் வேறு ஏதேனும் தற்செயல் நிகழ்விற்கு முகங்கொடுப்பின் அது பிரதான இடப்பரப்பிலுள்ள படகுத்தரிப்பிடத்திற்கு அல்லது தொடர்பாடல் கருவி ஊடாக இலங்கை கடற்படை/ இலங்கை பொலிஸுக்கு அதுபற்றி அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(16) காற்று மழை கலந்த வானிலை காலத்தின்போது கலம் கடல் முலையூட்டிகளை அவதானிப்பதற்கு கடலுக்குச் செல்லுதல் ஆகாது. சீரற்ற வானிலை காலத்தில் கலம் உடனடியாக பிரதான இடப்பரப்பிற்குத் திரும்புதல் வேண்டும்.

(17) வனசீவராசிகள் அலுவலர் ஒருவர் அல்லது எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஏதேனும் நேரத்தில் கலத்தைச் சோதிப்பதற்கு விரும்பினால் அவர் ஏதேனும் ஆட்சேபனை இன்றி அவ்வாறு செய்வதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

(18) நிபந்தனைகளில் ஏதேனும் ஒன்று அல்லது பல அல்லது அனைத்தும் மீறப்படின் அது கலத்துக்கு வழங்கப்பட்ட உரிமத்தினை இரத்துச் செய்வதில் முடிவடையும்.

### அட்டவணை IV

### தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்

*கடல் முலையூட்டிகளின் இனங்களை அவதானிப்பதற்கு அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெறுவதற்கு அறிவிக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படும் விவரங்கள்*

1. விண்ணப்பதாரின் விவரங்கள் :-

(i) விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :----.
(ii) விண்ணப்பதாரியின் முகவரி :----.
(iii) தேசிய அடையாள அட்டை இல. :----.
(iv) தொலைபேசி இல. :----.
(v) மின் அஞ்சல் முகவரி :----.

2. எந்தக் கடல் வலயத்திற்கு அனுமதிப்பத்திரம் ஏற்புடையதாகின்றது என்பது :----.

3. படகுத் தரிப்பிடம்/துறைமுகம் :----.

4. எந்தப் பிரதேச செயலாளர் பிரிவில் படகுத் தரிப்பிடம் /துறைமுகம் அமைந்துள்ளது என்பது :----.

5. கடல் முலையூட்டிகளின் இனங்களை அவதானிப்பதற்கான பயணத் திகதி :----.

6. விண்ணப்பதாரியுடன் பயணிக்கின்ற பயணிகளின் எண்ணிக்கை (விண்ணப்பதாரர் உட்பட) :----.

7. கடல் முலையூட்டிகளைப் அவதானிப்பதற்காக பயன்படுத்தப்பட்டிருக்கின்ற கலங்களின் பதிவு இலக்கம் :----.

8. கலங்களின் பெயர் :----.

நான், மேலே குறித்துரைக்கப்பட்ட திகதியன்று கடல் முலையூட்டிகளின் இனங்களை அவதானிக்கும் நோக்கத்திற்காக எனக்கு/ எனது குழுவிற்கு அனுமதிப்பத்திரம் ஒன்று வழங்கப்பட வேண்டுமென வேண்டுகோள் விடுக்கின்றேன். நான்/எனது குழு அனுமதிப்பத்திரத்தில் விதிக்கப்பட்ட நிபந்தனை மூலம் கீழ்ப்படிவதற்கு இணங்கிக் கொள்கின்றேன்.

.......................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

### அட்டவணை *V*

### தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்

### கடல் முலையூட்டிகளை அவதானிக்கும் நோக்கத்திற்காக வழங்கப்படும் அனுமதிப்பத்திரம்

.................................................................................................... என்னும் இடத்தைச் சேர்ந்த திரு./திருமதி...................................... என்பவர், அல்லது .................................................................. எண்ணிக்கையான ஆட்களைக் கொண்ட உமது குழு........................ ஆந் திகதியன்று காலை 6.00 மணிக்கும் மாலை 6.30 மணிக்கும் இடையில் ...................................................... இன் வலயத்தில் ..........................................இலக்க உரிமத்தைக் கொண்ட கலத்தைப் பயன்படுத்தி கடல் முலையூட்டிகளை அவதானிப்பதற்கு இத்தால் அனுமதிக்கப்படுகின்றது.

**நிபந்தனைகள்**

(i) அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவர்/வைத்திருப்பவர்கள் கடல் முலையூட்டிகளை அவதானிக்கும் நோக்கத்திற்காக அனுமதிக்கப்பட்ட கடல் வலயத்தை மட்டும் பயன்படுத்துதல் வேண்டும்.

(ii) அதிகாரமளிக்கப்படாத ஆள் எவரையும் அனுமதிக்கப்பட்ட கலத்தில் ஏற்றிச் செல்லுதலாகாது.

(iii) முலையூட்டிகளின் அவதானிப்பானது குறித்த திகதியில் விதித்துரைக்கப்பட்ட நேரங்களின்போது மட்டும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(iv) முலையூட்டிகளை அவதானிக்கின்ற வேளையில் கடல் முலையூட்டிகளின் இயற்கையான செயற்பாடுக்கு ஊறு விளைவிக்கும் செயல்கள் எவற்றையும் செய்தலாகாது.

(v) முலையூட்டிகளை அவதானிக்கின்றபோது உணவுப்பதார்த்தங்களைக் கடலுக்குள் வீசுதலாகாது.

(vi) இவ்வனுமதிப்பத்திரம் பராதீனப்படுத்தப்பட முடியாது.

(vii) அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்/வைத்திருப்பவர்கள் தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

**கட்டணங்கள்**

| | நிரல் *I*<br>ஆளின் விபரணம் | நிரல் *II*<br>கட்டணங்கள் |
|---|---|---|
| 1. | வயது வந்தவர் (உள்ளூர்) | ரூபா 20.00 |
| 2. | வயது வந்தவர் (வெளிநாடு) | 8 அமெரிக்க டொலர் அல்லது இலங்கை ரூபாக்களில் அதற்குச் சமனானது |
| 3. | சிறுவர் (உள்ளூர்) (6 வயதுக்கும் 12 வயதுக்கும் இடைப்பட்டவர்கள்) | ரூபா 10.00 |
| 4. | சிறுவர் (வெளிநாடு) (6 வயதுக்கும் 12 வயதுக்கும் இடைப்பட்டவர்கள்) | 4 அமெரிக்க டொலர் அல்லது இலங்கை ரூபாக்களில் அதற்குச் சமனானது |
| 5. | பாடசாலைச் சிறுவர்கள் (ஆள் ஒருவருக்கு) | ரூபா 5.00 |

9- 603

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.